வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ——— ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 23.12.2024 திங்கட்கிழமை இதழ் : 357 பக்கங்கள் : 12

# ஜனவரி மாதம் முதல் வாரத்தில் உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பு

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்



கொழும்பு, டிசெம்பர் 23

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்களை கோரும் வகையில் சட்டத்திருத்தம் அடுத்த மாதத்துக்குள் நிறைவேற்றப்பட்டால், பெப்ரவரி மாதமளவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பணிகளை முன்னெடுக்க முடியும் எனவும் ஜனவரி முதல் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து அறிவிக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.**

சித்திரை புத்தாண்டுக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளதை வரவேற்கிறோம்.

அரசியலமைப்பின் பிரகாரம் உரிய காலத்தில் தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகள்

11

# நான்கு நாள் காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி குணரத்தினம் (வயது 67) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நான்கு தினங்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவரை நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு

11

# அநுரகுமாரவின் தலைமையில் நாடு சரியான பொருளாதாரத் திசையில்!

## பிரித்தானியத் தூதுவர் பாராட்டு

கொழும்பு, டிசெ. 23

ஜனாதிபதி அநுரகுமாரவின் தலைமையில் நாடு சரியான பொருளாதார திசையில் சென்று கொண்டிருப்பதாக இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஆண்ட்ரூ பற்றிக் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் வர்த்தக வாய்ப்புக்களை ஆராய்வதற்காக பிரித்தானிய வணிகத் தலைவர்கள் குழு அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகவும் அவர் கூறினார்.

நிதி அமைச்சில் நிதி மற்றும் திட்டமிடல்

11

# ஜனவரி 12 சீனாவுக்கு செல்கிறார் ஜனாதிபதி

## இராஜதந்திர வரவேற்புக்கு பீஜிங்கில் சிறப்பு ஏற்பாடு

கொழும்பு, டிசெ. 23

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் ஜனவரி மாதம் 12ஆம் திகதி சீனாவுக்கு செல்கிறார்.

இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மற்றும் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க

11



# மணல் அகழ்வைக் கண்டித்து தென்மராட்சியில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

தென்மராட்சி - கரம்பகம் பிரதேசத்திலுள்ள வீதியில் மண் அகழ்வு இடம்பெற்றுள்ளமையை கண்டித்து பிரதேச மக்கள் போரட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

கரம்பகத்திலுள்ள விடத்தற்பளை - கரம்பகப் பிள்ளையார் இணைப்பு வீதியிலேயே இந்த மண் அகழ்வு இடம் பெற்றுள்ளது.

குறித்த விவசாய வீதி பல் நெடுங்காலமாக மணல் வீதியாகவே இருந்து வந்துள்ளது.

பிரதேச விவசாயிகள் தங்களது விவசாய உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு சிறந்த வீதியாக இதனையே பயன்படுத்தி வந்துள்ளனர்.

11

# முல்லைத்தீவு கடற்கரையில் மர்மப் பொருளால் பதற்றம்!

முல்லைத்தீவு, டிசெ. 23

முல்லைத்தீவு கடற்கரைப்பகுதியில் மிதந்து வந்த மர்மப்பொருளால் மீனவர்கள் அச்சமடைந்த சம்பவம் நேற்று பதிவாகியுள்ளது.

முல்லைத்தீவு தீர்த்தக் கடற்கரை பகுதியில் நேற்று மர்மப் பொதி ஒன்று அவதானிக்கப்பட்டது. இதனால் குறித்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

அதனையடுத்து மீனவர்கள் பொலிஸாருக்கு

11

# புதிய அரசமைப்பு நிச்சயம் உருவாகும்

## அரசாங்கம் உறுதி

கொழும்பு, டிசெ. 23

புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உறுதி மொழி நிச்சயம் நிறைவேற்றப்படும். இது விடயத்தில் அரசாங்கம் எவ்விதத்திலும் பின்வாங்காது என்று பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

11

# புகைப்படம் எடுக்க முற்பட்ட தாய், மகள் ரயில் மோதி பலி!

## அனுராதபுரத்தில் துயரம்

கொழும்பு, டிசெ. 23

அனுராதபுரம் ரயில் நிலையத்துக்கு அருகில் புகைப்படம் எடுக்க முற்பட்ட தாயும் மகளும் ரயில் மோதி உயிரிழந்தனர்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்பதற்காக இரத்தினபுரியிலிருந்து வருகைதந்த இருவரே சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

# பிரபாகரனுக்குப் பிறந்த நாள் வாழ்த்து; வவுனியாவில் ரி.ஐ.டியினர் விசாரணை

- குமார கோகுலன் -

வவுனியா, டிசெ. 23

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளுக்கு சமூக வலைத்தளத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் வாழ்த்து தெரிவித்தவரிடம் பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

சமூக வலைத்தளம் ஒன்றில் அவருடைய படத்தை பிரசுரித்து பிறந்த நாள் வாழ்த்து நபர் ஒருவரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த படத்திற்கு கீழ் சிலர் பிறந்த நாள் வாழ்த்துக்களை சமூக வலைத்தளத்தில் பதிவு செய்திருந்தனர்.

இவ்வாறு பிறந்த நாள் வாழ்த்துக்களை பதிவு செய்த வவுனியா, பண் டாரிக்குளம் பகுதியைச் சேர்ந்த

11

# சட்டத்தின் ஆட்சியையும் கௌரவத்தையும் மீட்டெடுக்க சீர்திருத்தங்கள் அவசியமாகும்

## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, டிசெ. 23

சட்டத்தின் ஆட்சியையும் கௌரவத்தையும் மீட்டெடுக்க விரைவான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துமாறு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொள்கை மற்றும் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் பெசில் பெர்னாண்டோ எழுத்து மூலம் இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, இந்நாட்டில் சட்ட சீர்திருத்த செயற்பாடுகளை முன்னெடுப்பதில் உடனடிக் கவனம் செலுத்தப்பட

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஒரு மாதத்துக்குள் அரிசி விலை குறைவடையும்

## அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள்



யாழ்ப்பாணம், டிசெ. 23

வடக்கு மாகாணத்தில் இன்னும் ஒரு மாதத்துக்குள் அரிசியின் விலை நிச்சயம் குறைவடையும் என வடக்கு மாகாணத்திலுள்ள பிரதான அரிசி ஆலைகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் வடக்கு மாகாணத்திலுள்ள அரிசி ஆலை உரிமையாளர்களே, வடக்கு மாகாணத்தில் விளையும் நெல்லின் பெரும்பகுதியைக் கொள்வனவு செய்வதற்குரிய பொறிமுறை உருவாக்கப்படும் என அமைச்சர் இ.சந்திரசேகரன் மற்றும் ஆளுநர் நா.வேதநாயகன் இருவரும் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கௌரவ அமைச்சர் இ.சந்திர சேகரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இருவரதும் தலைமையில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை வடக்கு மாகாண அரிசி ஆலை உரிமையாளர்களுடனான சந்திப்பு நடைபெற்றது.

ஆரம்பத்தில் கருத்துவெளியிட்ட ஆளுநர், அரிசியின் விலையில் ஏற்பட்ட சடுதியான அதிகரிப்பால் ஏழைகள் கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாகக் குறிப்பிட்டதுடன், அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அரிசியை விற்பனை செய்யக் கூடிய நிலைமை இல்லாதிருப்பதற்கான காரணத்தைக் கேட்டறிந்தார்.


இறக்குமதி செய்யப்பட்ட அரிசியையும் நிர்ணய விலையில் விற்பனை செய்யாமல், அவற்றின் 'லேபில்கள்' மாற்றப்பட்டு அதிகரிக்கப்பட்ட விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அரிசி ஆலை உரிமையாளர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட நிலையில் அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்துமாறு மாவட்ட நுகர்வோர் அதிகார சபைக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் இ.சந்திரசேகரன் அவர்கள், அரிசியை வைத்துக் கொண்டு தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டமை எல்லோருக்கும் தெரியும் எனவும், அவ்வாறான நிலைமை தொடரக் கூடாது என்பதில் அரசாங்கம் கவனத்துடன் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அரிசி ஆலை உரிமையாளர்களான உங்களை நட்டத்தில் வீழ்த்துவதையோ மக்களை கஷ்டத்தில் வீழ்த்துவதையோ விரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார். அத்துடன் அரசாங்கம் எதிர்காலத்தில் 3 இடங்களில் புதிதாக அரிசி ஆலையை அமைப்பதற்கு திட்டமிடுவதாகவும் குறிப்பிட்ட அவர், கடந்த காலங்களில் நெல்லைக் கொள்வனவு செய்த போது நீங்கள் அதை அரிசியாக்கும்போது நிர்ணய மாகும் விலையைவிட தற்போது அதிகவிலைக்கே விற்பனை செய்வதாகவும் தெரிவித்தார்.

அரிசி ஆலை உரிமையாளர்களை பழிவாங்குவதாக நினைக்க வேண்டாம் என்றும் அதிகமான ஏழைகள் வாழும் மாகாணம் எமது மாகாணம் என்பதைக் கவனத்தில் எடுத்து சமூகப்பொறுப்புடன் செயற்படுமாறும் வலியுறுத்தினார். (அ-5)

# வவுனியாவில் அதிக பனிமூட்டம்



வவுனியா, டிசெ. 23

வவுனியாவில் அன்மைய நாட்களை விடவும் நேற்று சற்று அதிக பனிமூட்டமாகக் காணப்பட்டது.

கடும் பனிமூட்டம் காரணமாகப் போக்குவரத்தை மேற்கொள்வதில் வாகனச் சாரதிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

குறிப்பாக ஏ-9 வீதி மற்றும் மன்னார் வீதிகளில் பயணிக்கும் வாகனங்கள் ஒளியைப் பாய்ச்சியபடி சென்றமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (அ-10)

# யாழ்ப்பாண பொலிஸாரின் கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாண பொலிஸாரின் ஏற்பாட்டில், கிறிஸ்மஸ் விசேட கரோல் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்றது.


நிகழ்வின் அதிதிகளாக யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி டி.எஸ். சூசைதாசன், வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் தனபால, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காலிங்க ஜெயசிங்க ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்வில், வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொலிஸார் பங்கேற்றினர். (அ)

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை ஒருவர் கைது; 150 லீற்றர் கோடா மீட்பு!

வவுனியா, டிசெ. 23

வவுனியா - ஓமந்தை சேமமடு பகுதியில் பல காலமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று முன் தினம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

ஓமந்தை பொலி ஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸார் முற்றுகையிட்டனர்.



இதன்போது கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த அதே பகுதியை சேர்ந்த 35 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 150 லீற்றர் கோடா மீட்கப்பட்டதுடன் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. (அ-10)

# மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மன்னாருக்கு விஜயம்

மன்னார், டிசெ. 23

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இதன்போது, மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

அத்துடன் மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

விசேடமாக மன்னார் மாவட்டத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் காணி அபகரிப்பு, படையினர் வசம் காணப்படும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், காற்றாலை மற்றும் மணல் அகழ்வினால் மன்னாரில் ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் கேட்டறிந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து முள்ளிக்குளம் மக்களின் காணிகள், அரச கட்டுப்பாட்டில் உள்ளமை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வேலணை பிரதேச வைத்தியசாலையில் மருத்துவ சேவை தடைப்படும் அபாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 23

வேலணை பிரதேச மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறையுடனும் 24 மணித்தியால மருத்துவ சேவை வழங்கப்பட்டு வந்தபோதும், எதிர்வரும் நாட்களில் அது தடைப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

அண்மையில் இந்த மருத்துவமனைக்குச் சென்ற மாகாண கணக்காய்வுக் குழுவின் கெடுபிடிகளை தொடர்ந்து, அரச உத்தியோகத்தர்களுக்கான கடமை நேரத்தில் மாத்திரம் சிகிச்சையளிப்பதென மருத்துவர்கள் தீர்மானித்துள்ள னர்.

வேலணை பிரதேச மருத்துவமனையில் 4 மருத்துவர்கள் கடமை புரிய வேண்டும். எனினும், ஆளணித் தட்டுப்பாட்டினால் 2 மருத்துவர்கள் மாத்திரமே அங்கு கடமையில் உள்ளனர்.

4 மருத்துவர்கள் கடமையாற்றினாலேயே வேலணை பிரதேச மருத்துவமனையினால் 24 மணித்தியால சிகிச்சையளிக்க முடியும் என்றபோதும், அங்கு கடமையில் இருந்த 2 மருத்துவர்களும் 24 மணித்தியால சேவையாற்றி வந்துள்ளனர்.

அந்த இரண்டு மருத்துவர்களும், தமக்கிடையில் நேரத்தை பங்கிட்டு, அரச மருத்துவமனையின் சேவை தடைப்படாத விதத்தில் 24 மணித்தியால சேவையாற்றி வந்துள்ளனர்.

இதனால், அவர்கள் மாதத்தில் மேலதிக நேரக் கொடுப்பனவு நேரம் தவிர்ந்த சுமார் 300 மணித்தியாலங்கள் வரை சேவையாற்றி வந்துள்ளனர்.

எனினும், அண்மையில் மாகாண கணக்காய்வு திணைக்களத்தினர் அங்கு விஜயம் மேற்கொண்டதை தொடர்ந்து, சர்ச்சை தோன்றியுள்ளது.

விதிமுறைகளுக்கு இணங்க, மாகாண கணக்காய்வுத் திணைக்களத்தினர் அங்கு சென்ற போது, இரண்டு மருத்துவர்களும் அங்கு கடமையில் ஈடுபட்டிருக்க வேண்டும். காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும், மாலை 2 மணி முதல் 6 மணி வரையும் கடமை நேரம்.

இந்த பணிநேர விதிமுறைக்கமைவாக கடமையாற்றினால், வேலணை பிரதேச மருத்துவமனையினால் 24 மணித்தியால சேவை வழங்க முடியாது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அல்லது மாவட்டத்திலுள்ள ஆதார வைத்தியசாலைகள் போன்ற பெரிய மருத்துவமனைகளில் பல மருத்துவர்கள் கடமையில் உள்ளதால், விதிமுறைகளுக்கு அமைய மருத்துவர்கள் கடமையாற்றுகிறார்கள். ஆனால், ஒருவர் அல்லது இருவர் மாத்திரமே கடமை புரியும் மருத்துவமனைகளில் விதிமுறைகளுக்கு அப்பாலான சேவை புரியப்படுகிறது. விதிமுறைகளின் அடிப்படையில் கடமையாற்ற போவதாக மருத்துவர்கள் குறிப்பிட்டால், வேலணை பிரதேச வைத்தியசாலை போன்ற சிறிய மருத்துவமனைகளை 24 மணித்தியாலங்களும் இயக்க முடியாது.

இந்த பின்னணியில், வேலணை பிரதேச வைத்தியசாலைக்கு மாகாண கணக்காய்வு திணைக்களத்தினர் சென்ற போது, மருத்துவர்களின் கடமை நேரம் தொடர்பாக ஏனைய சுகாதார உத்தியோகத்தர்களிடம் துருவித்துருவி விசாரணை நடத்தியதாகவும், இது தமது தொழில் முறை கண்ணியத்தை கேள்விக்குட்படுத்துவதாக அமைந்துள்ளதாக அந்த மருத்துவர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், வேலணை பிரதேச மருத்துவமனையில் 24 மணித்தியால சேவையை வழங்குவதெனில், விதிமுறைகளுக்கு அமைய கடமையாற்ற வேண்டிய - குறைந்தது 3 மருத்துவர்களையாவது நியமிக்க வேண்டுமென்றும், அவ்வாறு நியமித்தால் மாத்திரமே 24 மணித்தியால சேவையை வழங்க முடியுமென்றும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் கடமை நேரத்தில் மாத்திரம் சிகிச்சையளிக்க மருத்துவர்கள் முடிவு செய்துள்ளனர். இது தொடர்பான அறிவித்தல் வேலணை பிரதேச வைத்திய சாலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.12.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், மார்கழி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

## வீண் விவாதங்கள்

தமிழர் அரசியலின் எதிர்காலம் என்பது எவ்வாறு அமையும்? இப்படியொரு கேள்வியை முன்வைத்தால் எந்த தமிழ் கட்சி பதிலளிக்கும் தகுதியுடன் இருக்கும்? நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து கட்சிகளின் தலைவர்கள் பலர் அமைதியடைந்துவிட்டனர். அதிக ஆசனங்களை வெற்றி கொண்டதால், தாங்களே பிரதான கட்சியென்று கூறிக்கொள்ளும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியோ தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கின்றது. தமிழ்த் தேசிய அரசியல் என்பது - அடிப்படையில், வடக்கு, கிழக்கில் பணபலமுள்ள ஒருசிலர் நாடாளுமன்றம் செல்வதற்கானது என்னும் நிலைமையாகச் சுருங்கிவிட்டது.

அடுத்த ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறவுள்ளது - அதே போன்று பெரும்பாலும் மாகாண சபைத் தேர்தலும் இடம்பெறும் வாய்ப்புள்ளது. இந்தத் தேர்தல்களின் மூலம், வடக்கு, கிழக்கில் தமிழ் கட்சிகளின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான முயற்சியை மேற்கொள்ளாமல் தங்களுக்குள் மோதிக்கொள்வதிலேயே தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் நேரத்தை செலவிட்டுக்கொண்டிருக்கின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியை நோக்கி ஏன் மக்கள் அணிதிரண்டனர் என்பதற்கான சுயமதிப்பீட்டை எந்தவொரு கட்சியும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை. ஒரு தேர்தலில் தோல்வியுற்றதன் பின்னர் குறித்த கட்சிகள் தங்களின் தோல்விக்கான காரணங்களை ஆராயவேண்டும் - அதனடிப்படையில்தான், அடுத்த தேர்தலை எதிர்கொள்வதற்கான உபாயங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும் - ஆனால் தமிழ் கட்சிகளோ, இந்த அடிப்படையில் செயல்படவில்லை.

தமிழ் தேசியம் பேசிய கட்சிகள் கடந்த பதினைந்து வருடங்களாக முன்னெடுத்த அரசியல் உரையாடல்களை நோக்கினால், அனைத்துமே விழலுக்கிறைத்த நீர் என்பதாகவே கழிந்திருக்கின்றது. முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான தமிழர் அரசியல் என்பது - அடிப்படையில் கட்சிகளின் பிரச்சினையாகவும் சில தனிநபர்களின் தன்முனைப்புவாதப் பிரச்சினையாகவுமே தொடர்கின்றது. விடயத்தை ஆழமாக நோக்கினால் இவர்களது மோதல்களுக்கு பின்னால் மக்கள் நலன்சார்ந்த ஒரு நியாயமான காரணம் கூட இல்லை. அனைத்துமே குறிப்பிட்ட சிலரின் தனிப்பட்ட நலன்களுக்கான பிரச்னை மட்டுமே. இந்தப் பிரச்னைகள் அனைத்துமே யாழ்.குடாநாட்டுக் குரியதாகவே இருக்கின்றது.

கடந்த பதினைந்து வருடங்களாக இடம்பெற்ற அரசியல் விவாதங்களை மக்கள் திரும்பிப் பார்க்க வேண்டும். ஏனெனில் இவ்வாறான விவாதங்கள் அனைத்துமே மக்களின் பெயரால்தான் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், அவற்றால் மக்கள் அடைந்த நன்மை என்ன? அரசியலை யதார்த்தமாக கையாளுங்கள் என்று கூற முற்பட்டவர்களை புறம்தள்ளியே அனைத்தும் முன்னெடுக்கப்பட்டன. இறுதியில் இந்தக் கட்சிகள் சாதித்தது என்ன?

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் வரமுடியாக அரசியல் யாப்பின் பின்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழுபட்டது. அதற்கு விளக்கமும் அளித்தது. இன்னொரு புறம், அந்த வரமுடியாத யாப்பை எதிர்ப்பதாகக் கூறி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார். ஆனால், தமிழர் அரசியலோ தமிழ் மக்களுக்கு மாகாண சபையாவது மிஞ்சுமா என்னும் நிலையிலேயே சுழன்று கொண்டிருக்கின்றது. அது நடக்க வேண்டும் என்றாலும் இந்தியாவின் தயவு தேவை என்னும் நிலைமையே காணப்படுகின்றது.

இதிலிருந்து அரசியல் கட்சிகள் கற்றுக்கொள்ளப் போவதில்லை - ஏனெனில் அவர்களுக்கு மக்களின் நலனை விடவும் தங்களின் நலன்களே முதன்மையானது. ஆனால், சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுத்துவோர், கருத்துருவாக்கிகள் என்போராவது கற்றுக்கொள்ள முயற்சிப்பார்களா? தங்களின் ஆய்வுகள் மற்றும் அரசியல் மதிப்பீடுகள் அனைத்தும் தோல்வியடைந்துவிட்டன என்பதையாவது உணரும் நிலையில் இருக்கின்றனரா?

வீண் விவாதங்களில் நேரத்தை செலவிடுவதை விடுத்து, இனியாவது ஆக்கபூர்வமாக சிந்திக்க முற்படுங்கள்.

# ஆபிரிக்கப் பெரும் நத்தைகளை கட்டுப்படுத்தாவிடில் பேராபத்து

### ஐங்கரநேசன் எச்சரிக்கை



*யாழ்ப்பாணம், டிசெ.23*

ஆபிரிக்காவைத் தாயக மாகக் கொண்ட பெரும் நத்தைகள் சமீபத்தில் பெய்த பெருமழையின் பின்னர் பல பகுதிகளில் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் ஏற்கனவே இங்கு அவதானிக்கப்பட்டபோதும் இப்போது இவற்றின் பெருக்கம் அதிகமாகவுள்ளது. பயிர் பச்சைகளையெல்லாம் தின்றுதீர்க்கும் இவை, உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக இருப்பதோடு நோய்களைப் பரப்பும் காவிகளாகவும் செயல்படுகின்றன. இவற்றை இப்போதே கட்டுப்படுத்தத்தவறின் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக இவை அமையும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

ஆபிரிக்கப் பெரும் நத்தைகள் பிரித்தானியர் ஒருவரால் பின் விபரீதங்கள் புரியாமல் இலங்கைக்குள் எடுத்துவரப்பட்ட ஓர் அந்நிய இனம். ஒரு நத்தையிலேயே ஆண், பெண் இனப்பெருக்க அமைப்புகள் இரண்டும் இருப்பதால் இரண்டு நத்தைகள் சோடி சேரும்போது இரண்டுமே முட்டைகளை உருவாக்குகின்றன.

சராசரியாக 5 தொடங்கி 6ஆண்டுகள் வரை வாழுகின்ற ஒரு நத்தை தன் ஆயுளில் 1000இற்கும் அதிகமான முட்டைகளை இடுகின்றது. அந்நிய இனமான இவற்றை இரையாக்க இலங்கையின் இயற்கைச் சூழலில் இரைகௌவிகள் எதுவும் இல்லை. இதனால் பல்கிப்பெருகி இப்போது ஓர் ஆக்கிரமிப்பு இனமாக உருவெடுத்துள்ளது - என்றார். (எ)

# ஈ. பி. டி. பியின் அரசியல் செயல்பாடுகளை வலுப்படுத்த வன்னியில் புதிய கட்டமைப்பு

*வவுனியா, டிசெ.23*

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயல்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் புதிய கட்டமைப்பு ஒன்று அந்தக் கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியின் வன்னித் தேர்தல் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள், செயல்பாட்டாளர்களுடன் நேற்று வவுனியாவில் கலந்துரையாடலொன்றை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் முன்னெடுத்திருந்தார்.

குறிப்பாக வன்னித் தேர்தல் மாவட்டத்தின் அரசியல் செயல்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக வவுனியா சென்றிருந்த டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுகள் குறித்த அக, புற காரணிகளை ஆராய்ந்து கட்சியை வலுப்படுத்தும் வகையில் கட்டமைப்புகளை மறுசீரமைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், கட்சியின் தேசிய மாநாட்டை விரைவில் நடத்துவதற்கு தயாராகுமாறும் கட்சியின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தினார்.

(எ- 05)

# 10 லீற்றர் கசிப்புடன் கோப்பாயில் இருவர் கைது

*யாழ்ப்பாணம், டிசெ.23*

10 லீற்றர் கசிப்புடன் கோப்பாயில் இருவர் கைது செய்யப்பட்டனர்.


யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றையதினம் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த இருவரும் கோப்பாய் மத்தி பகுதியில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நிலையில், முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 10 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)



## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிசம்பர் - 23 திங்கக்கிழமை
குரோதி வருடம் - மார்கழி 09
நல்ல நேரம்: 6.00 - 7.31
ராகு காலம்: 7.30 - 9.00
திதி : அஷ்டமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
உறவினர். நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அமோகமான நாள்.

**இடபம்**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**மிதுனம்**
கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. புது வேலை அமையும்.

**கடகம்**
சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். புது வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். தள்ளிப்போன விஷயங்கள் உடனே முடியும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது.

**துலாம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். வாகனம் அடிக்கடி தொந் தரவு தரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**விருட்சிகம்**
பெற்றோரின் விருப்பங்களைநிறைவேற்றுவீர்கள். வாகனவசதிப் பெருகும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**தனுசு**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**மகரம்**
கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். விமர்சனம்கண்டு அஞ்சவேண்டாம். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம்.

**மீனம்**
விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சகோதரர்களால் ஆதாயம் அடைவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

# வீதியை புனரமைக்கக்கோரி உண்ணாவிரதப் போராட்டம்

## தலைவன் பிறந்த ஊர் என்பதால் இனவாத அரசால் நிராகரிப்பு?



யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ். பருத்தித்துறை - பொன்னாலை வீதியை புனரமைக்கக் கோரி வல்வெட்டித்துறையில் நேற்றுக்காலை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யுத்தத்துக்கு பின்னர் 30 வருடங்களுக்கு மேலாக வல்வெட்டித் துறையிலிருந்து தொண்டைமானாறு வரையான 12. 8 கிலோ மீற்றர் நீளமான வீதியை புனரமைக்கக் கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த போராட்டத்தில் அதிகளவான மக்கள் கலந்து கொண்டு தமது கையொப்பத்தை இட்டுச் செல்கின்றனர்.

இதன்போது, எமது வீதி எமக்கானது, புதிய அரசே புது வீதி அமைத்து தா?, வாக்குக்காக வீடு வந்தவரே வந்த வீதியை மறந்தது ஏன்?, தலைவன் பிறந்த ஊர் என்பதால் இனவாத அரசால் நிராகரிக்கப்பட்டதா? உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (எ-2-5)

# யாழில் விபத்தில் சிக்கிய முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்ப்பாணத்தில் கார்த்திகை விளக்கீடு தினத்தன்று விபத்தில் சிக்கிய நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். சுழிபுரம் கிழக்கு பகுதியைச் சேர்ந்த கந்தையா சிவனேசன் (வயது- 80) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சண்டிலிப்பாயில் இருந்து சுழிபுரம் நோக்கி இரவு வேளை மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, எதிரே வந்த வாகனத்தின் வெளிச்சம் இவரது கண்ணை தாக்கியமையால் மோட்டார் சைக்கிளுடன் பாலத்தினுள் விழுந்தார்.

இதன்போது படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (எ-05)

# கரைச்சி பிரதேச செயலக கலாசாரப் பெருவிழா



கிளிநொச்சி, டிசெ.23

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்ற தலைப்பில் வட மாகாண பண்பாட்டலு வல்கள் திணைக்களமும் கரைச்சி பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கரைச்சி பிரதேச செயலக 2024ஆம் ஆண்டுக்கான கலாசாரப் பெருவிழா, கரைச்சி பிரதேச செயலகத்தில் நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கரைச்சி பிரதேச செயலாளர் ரி. முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், கலைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# யாழில் பால்நிலை சமத்துவம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

பால்நிலை சமத்துவம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டம் ஒன்று யாழ்ப்பாணம், கொக்குவிலில் முன்னெடுக்கப்பட்டது.

பால்நிலை சமத்துவம் தொடர்பில் மக்கள் மத்தியில் சரியான விழிப்புணர்வு இதுவரை இல்லை என்பதை கருத்தில் கொண்டு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தலைமையில் இந்த விழிப்புணர்வு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பெண்கள், ஆண்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட பல்வேறு வயதினரையும் உள்வாங்கி இலங்கையிலே குறிப்பாக வடக்கு மாகாணத்திலே பால் நிலை சமத்துவம் எவ்வாறு பேணப்படுகிறது, அதற்கான முக்கியத்துவம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டப்பட்டது. (எ)

# வவுனியாவில் மூன்று பெண்கள் கைது

வவுனியா, டிசெ. 23

வவுனியாவில் விபசாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் தேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட மது ஒழிப்புப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி கஜேந்திரன் தலைமையில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது தேக்கவத்தை பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 - 30 வயதுக்கு உட்பட்டவர்களாவர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ- 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பலருக்கு ரூ.300 கோடி நிதியுதவி!

கொழும்பு, டிசெ. 23

**கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான 11 மாதங்களில் அரச தலைவர் நிதியத்தில் இருந்து பல்வேறு நபர்களுக்கு சுமார் 300 கோடி ரூபா நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் சிறப்பு செய்தி ஒன்றை வெளியிட்டுள்ள பிபிசி, பல்வேறு நபர்களின் மருத்துவ உதவிகளுக்காக ஜனாதிபதி நிதியத்தில் இருந்து 58 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

உயர்தரக் கல்வி உதவித் தொகையாக 32 கோடி ரூபாயும், மகாபொல உதவித் தொகையாக 16 கோடி ரூபாயும், சிறுவர்களின் நலனுக்காக 15 கோடி ரூபாயும், துறவி கல்விக்காக 3 கோடி ரூபாயும் செலுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கங்களின் அமைச்சர்கள் அரச தலைவர் நிதியத்தில் இருந்து பல கோடி ரூபாவை மருத்துவ உதவியாக பெற்றுள்ளதாக அண்மையில் பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. (அ)

# டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, டிசெ. 23

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 47,599 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, மேல் மாகாணத்தில் 20,519 பேர் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 12,030 டெங்கு நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 23 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# 2 பிள்ளைகளின் தந்தை கொலை

கொழும்பு, டிசெ. 23

களுத்துறை, கட்டுகுருந்த பகுதியில் உள்ள வீடொன்றில் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பயாகல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

களுத்துறை கட்டுகுருந்த சனச மாவத்தையில் வசிக்கும் பத்தரமுல்ல கிராமத்தைச் சேர்ந்த அமித் பிரியதர்ஷன என்ற 36 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீடு ஒன்றில் மர்மமான முறையில் ஒருவர் இறந்து கிடப்பதாக கிடைத்த தகவலின் பேரில் விசாரணை நடத்தியதில், வீட்டின் அறையில் தலைகீழாக சடலம் கிடந்தது.

பாதிக்கப்பட்டவரின் மார்பு மற்றும் வயிற்றில் ஆழமான காயங்கள் காணப்பட்டதாக விசாரணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த கொலை தொடர்பாக யாரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை பிரிவு குற்றத் தடுப்புப் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் நீதவான் ஆகியோர் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)


# சபாநாயகரை சந்தித்து பேசினார் சீனக் குழுவின் துணைத் தலைவர்

கொழும்பு, டிசெ. 23

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கும் சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் தேசியக் குழுவின் துணைத் தலைவி குயின் போயோங் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்ற ஒத்துழைப்பு, நிலைபேறான அபிவிருத்தி, வர்த்தகம், விவசாயம், தொழில்கள் மற்றும் பலதரப்பு ஈடுபாடுகள் போன்ற துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இலங்கையின் புதிய அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நோக்கங்களை அடைவதில் சீனாவின் உறுதிப்பாட்டுடன் உள்ளதாக குயின் போயோங் தெரிவித்துள்ளார்.



அத்துடன், பரஸ்பர அபிவிருத்தி மற்றும் செழிப்பை மேம்படுத்துவதற்கு முக்கிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதில் சீனாவின் தயார் நிலையையும் குயின் போயோங் வலியுறுத்தியுள்ளார். (அ)

# மேல் மாகாண ஆசிரியர்கள் இனிமேல் தனியார் வகுப்புகளில் கற்பிக்க தடை!

கொழும்பு, டிசெ. 23

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு தனியார் வகுப்புகளை நடத்துவதை கட்டுப்படுத்தி மாகாண கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம், மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் தமது பாடசாலை மாணவர்களிடம் பாடசாலை தவணையின்போது பணம் வசூலித்து தனியார் வகுப்புகளில் கற்பிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த சுற்றறிக்கையில் தங்கள் பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரம் முடிந்த பிறகு அல்லது வார விடுமுறை நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் பல்வேறு வெளி இடங்களில் பணம் வசூலித்து கூடுதல் வகுப்புகளை நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

# 20 நிறுவனங்களுக்கு எதிராக விசாரணை

கொழும்பு, டிசெ. 23

சட்டவிரோத நிதி முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்திய 20 நிறுவனங்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இவற்றில் சில நிறுவனங்களுக்கு எதிராக ஏற்கனவே சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நிதி நுகர்வோர் உறவுகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனைய நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மத்திய வங்கியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

# தனது வாழ்க்கை வரலாறு எழுதத் தயாராகும் ரணில்!

கொழும்பு, டிசெ. 23

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது வாழ்க்கை வரலாற்றை எழுதவுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 50 வருட அரசியல் வாழ்வின் பின்னர் தனது வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு தயாராகி வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

1973ஆம் ஆண்டில் பியகம தொகுதி அமைப்பாளராக அரசியலில் நுழைந்த அவர், 1977ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற சபாநாயகர் தவிர அனைத்து பதவிகளையும் வகித்த மிக மூத்த அரசியல் வாதி ஆவார். பின்னர் அவர் 2022ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை நாட்டின் 8ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக பணியாற்றினார்.

1994ஆம் ஆண்டு தொடக்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக பதவி வகித்து வரும் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி பதவியில் இருந்து விலகி தற்போது அனைத்துலக அமைப்பு ஒன்றின் ஆலோசகராக செயற்பட்டு வருகின்றார்.

1970ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்குள் நுழைந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோருக்கு அடுத்தபடியாக ரணில் விக்கிரமசிங்க, நீண்டகாலம் அரசியலில் இருந்தோர் அடிப்படையில் இரண்டாவது இடத்தில் உள்ளார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பண்டிகைக் காலத்தை முன்னிட்டு தாமரை கோபுர இயக்கம் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 23

கொழும்பு தாமரை கோபுரம் மேனேஜ்மென்ட் கம்பனி (பிரைவேட்) லிமிடெட் பண்டிகைக் காலத்திற்கான நீடிக்கப்பட்ட இயக்க நேரத்தை அறிவித்துள்ளது.

அதன்படி, தாமரை கோபுரம் டிசெம்பர் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் நள்ளிரவு வரை பொது மக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்படும் எனவும் டிசெம்பர் 27ஆம் திகதி காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை செயல்படும்.

மேலும், டிசெம்பர் 31 மற்றும் ஜனவரி 1ஆம் திகதியன்று காலை 9 மணி முதல் ஜனவரி 2 ஆம் திகதி மதியம் 1 மணி வரை திறந்திருக்கும். (அ)

# உணவகங்களில் திடீர் சுற்றிவளைப்பு

கொழும்பு, டிசெ. 23

புறக்கோட்டை, போதிராஜ மாவத்தையில் அமைந்துள்ள உணவகத்தில் ஜிந்துபிட்டிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

சில உணவகங்கள் மிகவும் அசுத்தமான நிலையில் இருந்ததோடு, சமையல் அறைக்கு அருகில் சமையல் செய்யும் இடங்களில் எலிகளின் கழிவுகள் இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

சில உணவகங்களில் சமையல் செய்யும் இடங்களில் பூனைகள் இருப்பதும் தெரியவந்துள்ளது. இந்த சோதனையின்போது, உணவக உரிமையாளர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதோடு, எலிகள் நடமாட்டம் அதிகமாக உள்ள தாகவும், இதற்கு மாநகர சபை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் சில கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

சுகாதார வைத்திய அதிகாரி சம்பந்தப்பட்ட கடைகளுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், உணவு தயாரிப்பதற்காக உடைந்த மற்றும் பொருத்தமற்ற பிளாஸ்டிக் கொள்கலன்களை அகற்றுமாறு உணவக உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், அசுத்தமாக உணவு சமைத்த அனைத்து உணவகங்கள் மீதும் வழக்குப் பதிவு செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தம் அரசிடம் வெளிப்படை இல்லை!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 23

**இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் விவகாரத்தில் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவில்லை. எட்கா ஒப்பந்தத்தால் ஏற்படும் விளைவுகளை எதிர்வரும் நாட்களில் மக்களுக்கு எடுத்துரைப்போம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது-பொதுஜன பெரமுனவை பலப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். கட்சியின் முக்கிய பதவிகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

2029 ஆம் ஆண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் பிரதான அரசியல் கட்சியாக எழுச்சிப் பெறும்.

நாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி குறிப்பிட்ட பொய் இன்று அரசாங்கத்துக்கே வினையாக மாறியுள்ளது.

வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அத்துடன் ராஜபக்ஷர்கள் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சட்டத்தின் முன் ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் குறித்து அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவில்லை.

குறிப்பாக எட்கா ஒப்பந்தத்தை குறிப்பிட வேண்டும். குறுகிய அரசியல் மாற்றத்துக்காக அடிக்கடி கொள்கைகளை மாற்றிக் கொள்வது முறையற்றதாகும்.

நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களில் ஒருபோதும் கைச்சாத்திட போவதில்லை என்பதில் உறுதியாக உள்ளோம். 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு நல்லாட்சி அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை கடுமையாக எதிர்த்தோம்.

ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இந்தியாவுக்கு சாதகமாக செயற்படவுமில்லை, எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகளை எடுக்கவுமில்லை.

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திட்டால் ஏற்படும் விளைவுகளை எதிர்வரும் நாட்களில் நாட்டு மக்களுக்கு எடுத்துரைப்போம். நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது-என்றார். (அ)

# வாகனச் சாரதிகளுக்கு பொலிஸார் எச்சரிக்கை!

கொழும்பு, டிசெ. 23

பண்டிகைக் காலங்களில் வாகனங்களைச் செலுத்தும் போது அவதானமாகச் செயற்பட வேண்டும் என பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மதுபானம் அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதனை முற்றாகத் தவிர்க்க வேண்டும் எனவும் பொலிஸார் பொதுமக்களைக் கோரியுள்ளனர்.

பண்டிகைக் காலங்களில் வழமையாக அதிகளவில் விபத்துக்கள் இடம்பெறுவதனால் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, ஹற்றன் மல்லியப்பு பகுதியில் நேற்று முன் தினம் மூவருக்கு மரணத்தை ஏற்படுத்திய பஸ் விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

விபத்து தொடர்பில் சாரதியிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், பஸ்ஸில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமெரா அமைப்பினூடாக விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஹற்றனில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த தனியார் பஸ் நேற்று முன் தினம் ஹற்றன் - மல்லியப்பு பகுதியில் விபத்துக்குள்ளானது. (அ)

# அரிசி திருடிய இருவர் கைது!

கொழும்பு, டிசெ. 23

சுமார் 1000 கிலோ அரிசியை திருடிய இருவர் களுத்துறை தெற்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை மத்திய சந்தி பகுதியில் மொத்த அரிசி விற்பனை செய்யப்படும் கடையொன்றில் இருந்து குறித்த சந்தேகநபர்கள் இருவரும் அரிசியை திருடி யுள்ளனர்.

இரவு வேளையில் இரண்டு முச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்தி இந்த திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளமை அங்கிருந்த சி.சி.ரி.வி கமெரா வில் பதிவாகியுள்ளது. (அ)

# குழந்தைகள், தாய்மார்களின் ஊட்டச்சத்து அதிகரிக்கப்படும்



கொழும்பு, டிசெ. 23

குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்தை அதிகரிப்பதற்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களை முறையாகப் பராமரிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்படும் என்றும், அதற்கு ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பங்களிப்பை எதிர்பார்ப்பதாகவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி குன்லே அதெனியி ஆகியோருக்கிடையில் நேற்று முன் தினம் சனிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ் விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பங்களிப்பில் நாட்டில் அமுல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் புரிந்துணர்வைப் பெற்று ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பிரதிநிதி குன்லே, இலங்கையின் மருத்துவமனை அமைப்பு மற்றும் இலவச சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பையும், சுகாதார திட்டங்களுக்கு தேவையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கையில் சுகாதார சேவையில் சில பின்னடைவுகள் காணப்பட்ட போதிலும், புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அதனை முறையாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

# சுதந்திர இலங்கையில் அனைவருக்குமான யாப்பு இன்னமும் உருவாக்கப்படவில்லை!

## லால் விஜயநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 23

சுதந்திர இலங்கையில் அனைத்து இனக்குழுமங்களும் ஏற்றுக்கொள்கின்ற அரசியல் யாப்பொன்று இன்னமும் உருவாக்கப்படவில்லை என்று சட்டத்தரணி லால் விஜயநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் புதிய அரசியல் யாப்பொன்று உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தியுள்ள அவர், அதில் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற் கான ஏற்பாடுகள் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல்களின்போது அளித்த வாக்குறுதிக்கு அமைவாக புதிய அரசியலமைப்புக்கான செயற்பாட்டின்போது மக்கள் கருத்தறியும் குழுவின் அறிக்கையை சீர்தூர்க்கிப் பார்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தாலும் தற்போது வரையில் நாட்டில் உள்ள பல்லினங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியலமைப்பொன்று உருவாக்கப்படவில்லை என்பது துரதிஷ்டவசமான நிலைமையாகும்.

குறிப்பாக, 1948இல் சுதந்திரம் அடைந்ததன் பின்னர் பிரித்தானியா அறிமுகப்படுத்திய சோல்பரி யாப்பே அமுலாக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் 1949இல் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டதால் மலையக மக்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டனர்.

அதன் பின்னர் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டு இனங்களுக்கு இடையிலான விரிசல் வெகுவாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனையடுத்து 1972ஆம் ஆண்டு குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டாலும் கூட அதில் அனைத்தின மக்களையும் உள்வாங்கவில்லை.

குறிப்பாக தமிழ் மக்கள் அந்த யாப்பு உருவாக்கத்துக்குள் உள்வாங்கப்படவில்லை. 1978ஆம் ஆண்டு இரண்டாவது குடியரசு யாப்பில் இந்த நிலைமை மேலும் மோசமடைந்தது.

இதனால் இனங்களுக்கு இடையிலான விரிசல்கள் அதிகரித்து போர் நிலைமைகள் தீவிரமடைந்தது. அது முப்பது ஆண்டுகள் வரையில் நீடித்திருக்கிறது.

இவ்வாறான நிலையில் தற்போது வரையில் அமுலில் இருக்கின்ற யாப்பில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

எனினும், அந்த யாப்பில் நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்களுக்கான இனச்சமத்துவ அந்தஸ்து வழங்கப்படவில்லை.

ஆகவே குறித்த யாப்பினை அனைவரும் ஏற்றுக்கொள்ளாத நிலைமை நீடிப்பதோடு இலங்கையர் என்ற அடையாளத்தை உறுதிப்படுத்த நிலைமையும் தொடருகின்றது.

இவ்வாறானதொரு சூழலில் புதிய அரசியலமைப்பொன்று நாட்டுக்கு அவசியம் தேவையாக உள்ளது. அந்த அரசியலமைப்பானது, நாட்டின் பல்லினச் சமத்துவத்தினை உறுதிப்படுத்துவதாக இருப்பதோடு அனைவரும் இலங்கையர் என்ற அடையாளத்தை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்-என்றார். (அ)

# நாட்டின் பல பகுதிகளில் எலிக்காய்ச்சல் அபாயம்

கொழும்பு, டிசெ. 23

நாட்டின் சில பகுதிகளில் சீரற்ற காலநிலை காரணமாக எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக வைத்திய நிபுணர் பேராசிரியர் பிரிய மாலி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

வயல்கள் மற்றும் நீர்த் தேங்கி நிற்கும் இடங்களில் பணியாற்றுபவர்கள் மற்றும் எலிகள் அதிகளவில் நடமாடும் இடங்களில் உள்ளவர்களுக்கு இந்த நோய் தாக்கம் ஏற்படும் அபாயம் அதிகமாகும் என அவர் குறிப்பிட்டார்.

இதற்கான நோய் எதிர்ப்பு மருந்துகளை அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்களில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் வைத்திய நிபுணர் பேராசிரியர் பிரிய மாலி ஜயசேகர தெரிவித்தார். (அ)

# இலங்கையின் கடன் அபாயநிலை முந்தைய நிலையை விட வீழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 23

இலங்கையின் கடன் அபாய நிலை, முந்தைய நிலையை விட வீழ்ச்சி அடைந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.

அதற்கமைய, நாட்டின் வங்கிக் கட்டமைப்பு வேறு நாடுகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும்போது, அதிகளவு நன்மைகளைப் பெறக் கூடிய நிலைமை நடைமுறைப்படுத்தப்படும்.

எனினும், இலங்கை தொடர்பான கடன் தரப்படுத்தல் நிறுவனங்களின் தற்போதைய மதிப்பீடு நிலைமை போதுமானதல்ல.

இதற்காக அரசாங்க இலக்குடன் கூடிய பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் நம்புவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களை இலங்கைக்கு அழைக்க உதவுங்கள்!

## ரஷ்ய போரில் ஈடுபடுத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 23

**ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வதற்காக முகவர்கள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டு ரஷ்ய படையில் இணைந்து போர்க்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ள வடக்கு தமிழ் இளைஞர்கள் தங்களை இலங்கைக்கு அழைத்துச் செல்வ தற்குரிய நடவடிக்கைகளை யாராவது முன்னெடுக்குமாறு பகிரங்கமான கோரிக்கையை மீண்டும் முன்வைத்துள்ளனர்.**

பெல்ஜியம், ஜேர்மன், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்காக முகவர்களுக்கு பணத்தை செலுத்தி இலங்கையிலிருந்து சில மாதங்களுக்கு முன்னதாக வெளியேறியிருந்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 இளைஞர்கள் ரஷ்யப் படையில் வலிந்து இணைக்கப்பட்டு உக்ரேனுக்கு எதிரான போர்க்களத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் சுயனிகாந்த் பகீரதன் மற்றும் அகிஸ்டராஜா மிதுர்ஷன் ஆகியோர் குரல் பதிவு மூலமாக விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-நாங்கள் முகவர்கள் மூலம் அழைத்து வரப்பட்டு ஏமாற்றப்பட்டு விட்டோம். தற்போது ரஷ்யாவின் இராணுவத்தில் இணைக்கப்பட்டுள்ளோம். நாங்கள் போர் நடைபெறும் எல்லைக்கு அருகில் தான் உள்ளோம். எம்முடன் பாலச்சந்திரன் என்பவரும் உள்ளார்.

ஒவ்வொரு நாளும் போர் உக்கிரமாக இடம்பெறுகிறது. நாங்கள் இருக்கின்ற இடத்துக்கு அருகில் ஆட்லறி எறிகணைகளும், ட்ரோன் மூலமான தாக்குதல்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தான் தற்போதும் இருக்கிறோம்.

எங்களுடன் இருந்த 19 இலங்கையர்களில் 3 பேர் இறந்துவிட்டார்கள். ஒருவரைக் காணவில்லை. அவர்களில் பலர் இலங்கை இராணுவம், கடற்படை போன்றவற்றில் இருந்தவர்கள். அவர்கள் கூட அச்சத்துடன் தான் இருக்கின்றார்கள். எங்களால் போர் எல்லையில் தொடர்ந்தும் இருக்க முடியாது.

எமது உயிருக்கு உத்தரவாதமில்லை. தயவு செய்து எம்மை மீண்டும் இலங்கைக்கே செல்வதற்கு யாராவது நடவடிக்கைகளை எடுங்கள். நாங்கள் மிகத் தாழ்மையாக இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம். எங்களை உறவுகளுடன் இணைத்துவிடுங்கள் என்று குறிப்பிட்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதி நிதிய நடைமுறைபடியே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன!

## கூறுகிறார் ரணில்



கொழும்பு, டிசெ. 23

2022 முதல் செப்ரெம்பர் 2024 வரையிலான தனது பதவிக் காலத்தில், அரசியல்வாதிகளின் மருத்துவ உதவிக்கான அனைத்து தனியார் கோரிக்கைகளும் ஜனாதிபதி நிதியத்தின் நிலையான நிர்வாக நடைமுறைகளின் படியே கையாளப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், ஒருவரை தவிர, எவரும் 1 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நிதி உதவியைப் பெறவில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அத்துடன், தமது பதவிக் காலகட்டத்தில் செய்யப்பட்ட பல குறிப்பிடத்தக்க கொடுப்பனவுகளை அவர் கோடிட்டு காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மேல் மாகாண முதலமைச்சர் இசுர தேவபிரிய பெரேராவின் இருதய அறுவைச் சிகிச்சைக்கு 1 மில்லியன் ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளன. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் கொங்கஹகேவின் இருதய அறுவைச் சிகிச்சைக்கு 500,000 ரூபாய்கள் வழங்கப்பட்டன.

கேட்கும் கருவிகளை பெறுவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சி. முத்துக்குமாரானாவுக்கு 400,000 ரூபாய்கள் வழங்கப்பட்டன.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஏ. ஜகத் குமாரவுக்கு இருதய அறுவை சிகிச்சைக்கு 1 மில்லியன் ரூபாய்கள் வழங்கப்பட்டன.மூத்த நடிகை மாலினி பொன்சேகாவுக்கு சத்திரசிகிச்சைக்காக 5 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளில், மருத்துவ சிகிச்சைகளுக்காக ஜனாதிபதி நிதியம் 100 மில்லியன் ரூபாய்களுக்கும் அதிகமான நிதி உதவியை வழங்கியுள்ளது-என்றார். (அ)

### கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை!

கொழும்பு, டிசெ. 23

கிரிந்திவெல - வல்கம்முல்ல பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

திம்பிரிகம, கிரிந்திவெல பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் கொலை செய்யப்பட்ட நபர் குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்திருந்த காணியில் இருந்த காவலாளி ஒருவரே இக்கொலையை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.சந்தேக நபர் கொலையை செய்துவிட்டு இறந்தவரின் மோட்டார் சைக்கிளுடன் தப்பிச் சென்றுள்ளார். (அ)

### அந்நியச் செலாவணி இருப்பு அடிப்படையில் வாகன இறக்குமதி குறித்து அரசு தீர்மானம்!

கொழும்பு, டிசெ. 23

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் அரசாங்கத்திடம் இருக்கும் அந்நியச் செலாவணி இருப்புக்களின் அடிப்படையில் வாகன இறக்குமதிக்காக ஒதுக்கப்படும் அந்நியச் செலாவணி தீர்மானிக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இதனை தெரிவித்துள்ளது.

வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு படிப்படியான அணுகுமுறை, அரசாங்கத்தின் பொருளாதார மீட்சி மற்றும் அந்நியச் செலாவணி மேலாண்மையின் எச்சரிக்கையான சமநிலையை பிரதிபலிப்பதாக அந்த அதிகாரி கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், மேலும் விவரங்களை வழங்க அந்த அதிகாரி மறுத்துள்ளதுடன் அதிகாரபூர்வ முடிவுகள் முறையாக வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், பஸ்கள் இறக்குமதியை உள்ளடக்கிய முதலாம் கட்டம் ஏற்கனவே தொடங்கிவிட்டது என்றும், அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குள், இரண்டாம் கட்டமாக தனிப்பட்ட பயன்பாட்டு வாகனங்களின் இறக்குமதி மீண்டும் தொடங்கும் என்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துணை அமைச்சர் பிரசன்ன குணசேன கூறினார்.

"கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார மந்த நிலையின் போது அந்நியச் செலாவணி இருப்புகளைப் பாதுகாக்க 2020 இல் செயல்படுத்தப்பட்ட வாகன இறக்குமதிக்கான தற்காலிக இடைநீக்கத்தை அரசாங்கம் தளர்த்தத் தொடங்கியுள்ளது," என்று அவர் கூறினார்.

கட்டுப்பாடுகளை தளர்ப்பதற்கு படிப்படியான அணுகுமுறை, விதிமுறைகள் மற்றும் காலக்கெடு நிதி அமைச்சகத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், வாகன இறக்குமதிகளை நிர்வகிக்க கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

"இந்த நடவடிக்கைகள் வெளிநாட்டு இருப்புக்களை குறைத்து, கையிருப்புக்கு வழிவகுக்கும் அதிகப்படியான வாகன இறக்குமதிகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன" என்று குணசேனா கூறினார்.

# அமைச்சர்களின் கல்வி தகுதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பியுங்கள்

## அரசாங்கத்துக்கு எதிர்க்கட்சி சவால்

கொழும்பு, டிசெ. 23

சபாநாயகரின் கலாநிதி பட்டம் தொடர்பான சர்ச்சை வெடித்ததையடுத்து அரசாங்கம் திட்டமிட்டு எதிர்க்கட்சியினர் மீது போலி பிரசாரங்களை முன்வைக்கின்றது. எதிர்க்கட்சியினர் தொடர்பில் ஆராய்வதை விடுத்து குறைந்த பட்சம் அமைச்சரவை அமைச்சர்களின் கல்வி தகைமைகளை யாவது சபையில் சமர்ப்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் தொடர்பான சர்ச்சை வெடித்ததையடுத்து அந்த அரசாங்கம் கலவரமடைந்தது. இதனால் திட்டமிட்டு எதிர்க்கட்சிகள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனை அடிப்படையாகக் கொண்டே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கல்வித் தகைமை தொடர்பிலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் சாதாரண தரம் உள்ளிட்ட சகல கல்வி தகைமை சான்றிதழ்களையும் பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளதோடு மாத்திரமின்றி, அவை ஹன்சாட்டிலும் பதியப்பட்டுள்ளன. ஆனால் தேசிய மக்கள் சக்தியின் கலாநிதிகளுக்கும், பேராசிரியர்களுக்கும், வைத்தியர்களுக்கும் என்ன ஆனது?

பிரதிச் சபாநாயகர் ரிஸ்வி சாலி விசேட வைத்திய நிபுணர் எனக் குறிப்பிட்டுள்ளமை தொடர்பில், இலங்கை வைத்திய சபையிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணிகள் குழு முறைப்பாடளித்திருந்தது.

ஓரிரு தினங்களுக்குள் அவர் வைத்தியரா அல்லது விசேட வைத்திய நிபுணரா என்பது தெரியவரும். அமைச்சர் உபாலி பன்னிலகே தொடர்பில் சமூக வலைத்தளச் செயற்பாட்டாளர் ஒருவரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்கள் ஏதேனுமொரு தேர்தலில் களமிறங்குவதாயின் வேட்புமனு தாக்கலுக்கு முன்னர் அந்த பதவிகளிலிருந்து விலக வேண்டும்.

அமைச்சர் உபாலி பன்னிலகே தேர்தலுக்கு முன்னர் பல்கலைக்கழகமொன்றில் பணியாற்றியிருக்கின்றார். ஆனால், வேட்புமனு தாக்கல் செய்யும்போது அவர் அந்த பதவியிலிருந்து விலகியிருக்கவில்லை. வேட்புமனு தாக்கலின் பின்னர் இந்த தொழிலுக்கான சம்பளத்தையும் பெற்றிருக்கின்றார்.

அவர் அமைச்சரான பின்னரும் பல்கலைக்கழக பேராசிரியருக்குரிய சம்பளத்தைப் பெற்றிருக்கின்றார். இது பாரதூரமான காரணியாகும் -என்றார். (அ)

# பொருளாதாரத்தை முறையாக வழிநடத்த சிறந்த பொருளாதாரக் கொள்கை தேவை

கொழும்பு, டிசெ. 23

இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்தமையானது பொருளாதார மீட்சி செயல்முறையில் ஒரு முக்கிய மைல்கல்லாகும் என நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

சுதந்திர ஊடகவியலாளர் இயக்கத்தின் நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை முறையாக வழிநடத்திச் செல்வதற்கு முறையான பொருளாதார கொள்கைகள் அவசியமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடொன்றில் ஆட்சி மாற்றங்கள் ஏற்படுகின்ற போதிலும், மாற்றமடையாத பொருளாதார கொள்கைகள் அவசியம் எனவும் அவர் குறித்த பதிவில் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் கடன் அபாய நிலை, முந்தைய நிலையைவிட வீழ்ச்சி அடைந்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி அவதிப்படும் ரோஹிங்கியா அகதிகள்!

ரிஷாத் பதியுதீன் எம். பி. வெளிப்படுத்தல்

திருகோணமலை, டிசெ.23

திருகோணமலை, ஜமாலியா பாடசாலையில் எந்தவித அடிப்படை வசதிகளும் இன்றி மியன்மார், ரோஹிங்கியா அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் வெளிப்படுத்தியுள்ளார்.





முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரைப் பகுதியில், மியன்மாரில் இருந்து சுமார் 115 இற்கு மேற்பட்டவர்கள் கடந்த வாரம் கரையொதுங்கியதையடுத்து, அவர்கள் திருகோணமலை அஷ்ரப் இறங்குதுறைக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர், திருகோணமலை ஜமாலியா பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த, மியன்மார் அகதிகளை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் ஆகியோர் திருகோணமலை, ஜமாலியா பாடசாலைக்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

அடிப்படை வசதிகள் கூட இல்லாமலுள்ள மியன்மார், ரோஹிங்கியா அகதி மக்களை சந்தித்து, அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து கொண்ட ரிஷாத் பதியுதீன், அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்கி வைத்தார்.

மேலும், அரசாங்கத்தின் ஊடாக இவர்களுக்கு முன்னெடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்து, பாதுகாப் புப் பிரிவினர் மற்றும் ஐ. நா. சபையின் ஊடாக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் பற்றியும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (எ)

## சாய்ந்தமருது தாமரைக்குளம் புனரமைப்பு

சாய்ந்தமருது, டிசெ.23

சாய்ந்தமருது தாமரைக் குளத்தில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றி, அதனைச் சுத்தம் செய்யும் வேலைத் திட்டம் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம் பாவாவின் அவசர வேண்டுகோளின் பேரில் கல்முனை மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சாய்ந்தமருது மருத்துவமனை, மல்ஹர் சம்ஸ் பாடசாலை மற்றும் பொது நூலகம் என்பவற்றுக்கு அருகில் அமைந்துள்ள இக்குளமானது பிரதேசத்தின் வெள்ள நீரை உள்வாங்கி - வாய்க்கால் ஊடாக கரைவாகு பிரதான குளத்துக்கு அனுப்புகின்ற ஒரு முக்கிய நீர் நிலையாக காணப்படுகிறது.

எனினும், சல்பீனியாக்கள் மற்றும் குப்பை கூழங்களினாலும் புதர்களினாலும் இதன் இயற்கைத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுற்றுச்சூழலுக்கும் அச்சுறுத்தலாக காணப்படுவதால் வெள்ள அனர்த்தத்துக்கு முகம் கொடுக்கும் வகையில் இதனை அவசரமாக புனரமைப்பு செய்ய வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக அதிகாரிகள் சகிதம் அவர் அங்கு கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை நேரடியாக அவதானித்து, இப்பிரச்னையை உடனடியாக கல்முனை மாநகர ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு சென்றிருந்தார்.

இதையடுத்து சல்பீனியாக்கள், புதர்கள் மற்றும் திண்மக் கழிவுகளை அகற்றும் பணிகள் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் கல்முனை மாநகர சபையால் - கனரக இயந்திரங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ)

## தேசிய பாடலாக்க போட்டியில் வீரமுனை சுதர்சன் முதலிடம்




கல்முனை, டிசெ.23

தேசிய பாடலாக்க போட்டியில் அம்பாறை மாவட்டத்தின் வீரமுனையைச் சேர்ந்த அருளானந்தம் சுதர்சன் முதலிடம் பெற்றுள்ளார்.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் உளவள ஆலோசனை உத்தியோகத்தராக கடமையாற்றிவரும் சுதர்சன் ஏற்கனவே பல விருதுகளைப் பெற்றவர்.

இந்த நிலையில், அலரிமாளிகையில் நடைபெற்ற தேசிய இலக்கிய விருது விழாவில், திறந்த பிரிவு பாடலாக்கத்தில் அகில இலங்கை ரீதியில் முதலாமிடம் பெற்று விருது, சான்றிதழ் மற்றும் காசோலையைப் பெற்றுக்கொண்டார்.

தேசிய மட்டத்தில் 25 படைப்புகளில் அருளானந்தம் சுதர்சனின் ஆக்கம் முதலிடம் பெற்றது. (எ)

## ரோஹிங்கியா அகதிகளுக்கு பெண்கள் அமைப்பு உதவி

திருகோணமலை, டிசெ.23

மியன்மார் நாட்டின் ரோஹிங்கியா அகதிகளுக்கு திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பினர் நேற்றையதினம் காலை உணவு மற்றும் மதிய உணவுகளை வழங்கினர். அதேவேளை, உடைகளையும் பெண்கள் வலையமைப்பினர் வழங்கினர். (எ)



மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தம்

## அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு

கல்முனை, டிசெ. 23

மாவடிப்பள்ளியில் வெள்ள அனர்த்தத்தில் சிக்கி மரணித்த மத்ரஸா மாணவர்களின் உயிரிழப்பை தடுப்பதற்கு முன்னாயத்தம் மற்றும் தமது சட்டக் கடமையை முறையாக மேற்கொள்ளாத அரச அதிகாரிகளுக்கு எதிராக முதலாவது வழக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரீ. கருணாகரன் முன்னிலையில் ஆதரிப்பதற்காக அழைக்கப்பட்டது.

மாவடிப்பள்ளியில் இடம்பெற்ற கோர அனர்த்தத்தின் போது, தகுதி வாய்ந்த அதிகாரிகள் இந்த அனர்த்தத்தை தடுக்க சட்ட ரீதியில் தத்துவமிருந்தும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்ற அடிப்படையில் வழக்கு குற்றவியல் நடபடி முறை கோவையின் பிரிவு 136(1)(அ) பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

உழவியந்திரம் தடம்புரண்டதில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு மரணித்தவரது சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய நிலையில் வழக்கின் முறைப்பாட்டாளர் நீதிமன்றத்தால் பரீட்சிக்கப்பட்டு அவர்களுடைய சாட்சியம் சட்டத்தரணிகளால் நெறிப்படுத்தப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, பின்னர் நீதிபதி முறைப்பாட்டாளரிடம் பல வினாக்களை வினவி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கொண்டு நடத்துவது தொடர்பில் ஆராய்ந்து தன்னுடைய கட்டளை ஒன்றை வழங்குவதற்காக 2025. 01. 17ஆம் திகதி வழக்கு அழைப்புக்காக ஒத்திவைக்கப்பட்டது. (எ)

## வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்தில் மோதி இளைஞன் பலி

மட்டக்களப்பு, டிசெ. 23

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமாங்கேஸ்வரர் ஆலய பிரதான வீதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்தில், மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞன் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் மாமாங்கம், பாடசாலை வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய ரஞ்சித் விசிதன் என்ற இளைஞனே உயிரிழந்தார்.

ஒப்பந்தகாரர் ஒருவர் அவரது வாகனங்களை வீதியில் நிறுத்தி வைத்திருந்த நிலையிலேயே இந்த விபத்து இடம் பெற்றது.

மட்டக்களப்பில் தற்போது மழைபெய்து வரும் நிலையிலும் குறித்த வாகனம் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பகுதி இருளாகவுள்ள நிலையிலும் இந்த விபத்து இடம்பெற்றது.

பாரிய வாகனங்களை ஏற்றிச்செல்வதற்காக பயன்படுத்தப்படும் வாகனத்திலேயே மோட்டார் சைக்கிள் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் வாகனங்கள் நிறுத்திவைக்கப்படுவது குறித்து கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரின் கவனத்துக்கு கொண்டுசென்ற போதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையிலேயே இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ)

## படைப்பாக்கப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் கௌரவிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 23

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தால் நடத்தப்படும் மாகாண இலக்கிய விழாவை முன்னிட்டு இம் மாகாணத்தில் உள்ள அரச நிறுவனங்களில் சேவையாற்றும் கலை இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள உத்தியோகத்தர்களுக்கிடையே [illegible] படைப்பாக்கப் போட்டிகளில் பங்கேற்று வெற்றியீட்டிய வர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்ற




இந்த நிகழ்வின்போது, பல்வேறுபட்ட துறைசார் உயர் அதிகாரிகள், இலக்கியத்துறையினர் எனப் பலர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநலனுக்கு தியானம் மிகச் சிறந்த கருவி

## உலக தியான தினத்தை முன்னிட்டு ஐ. நாவில் சிறீ சிறீ ரவிசங்கர் உரை

நியூயோர்க், டிசெ.23

மனநலனுக்கு தியானம் மிகச் சிறந்த கருவி என்றும் தியானம் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் செல்ல வேண்டும் என்றும் ஐ. நா. தலைமையகத்தில் நடைபெற்ற முதல் உலக தியான தினத்தில் சிறீ சிறீ ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.


டிசெம்பர் 21ஆம் திகதி உலக தியான தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டதை அடுத்து முதல் உலக தியான தினம் உலகின் பல பகுதிகளில் கொண்டாடப்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐ. நா. தலைமையகத்தில் நடைபெற்ற உலக தியான தின கொண்டாட்டத்தின் தொடக்க அமர்வில் வாழும் கலை அமைப்பின் நிறுவுநரும், ஆன்மீக குருவுமான சிறீ சிறீ ரவிசங்கர் சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அவர் கூறுகையில், "இன்று தியானம் என்பது ஆடம்பரம் அல்ல, அது அத்தியாவசியமான ஒன்று. மனநலனுக்கு தியானம் மிகச் சிறந்த கருவி. பல் சுகாதாரம் இருப்பது போல் மனதுக்கான சுகாதாரமும் உள்ளது. தியானத்தில் ஈடுபடுபவர்கள் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியை உணர்கிறார்கள். அவர்கள் உலகத்தை மகிழ்ச்சியாக வைக்கிறார்கள். மன ரீதியிலான பிரச்னை என்பது உலக மக்கள் தொகையில் மிகப் பெரிய எண்ணிக்கையில் இருக்கிறது. ஒருபுறம் தீவிர பதற்றம் மறுபுறம் தீவிர மனச்சோர்வு என மனநல நெருக்கடி நம் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. ஒருபுறம், நமது இளைஞர்கள் ஆக்ரோஷமான நடத்தைக்கு உள்ளாகிறார்கள். மறுபுறம், மனச்சோர்வுடன் உள்ளார்கள்.

தியானம், நம்மைச் சுற்றியுள்ள மக்களின் உணர்வுகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. தனக்கும் பிறருக்கும் தீங்கு விளைவிக்கும் சமூக விரோத செயல்களில் இருந்து விலகி இருக்க தியானம் நமக்கு உதவுகிறது.

எனவே, இன்று தியானம் மிகவும் அவசியமானது. ஆடம்பரமானது அல்ல. தியானம் செய்வதற்காக மக்கள் மலைகளைத் தேடியும் கடற்கரைகளைத் தேடியும் சென்றார்கள்.




ஆனால், இன்று தியானம் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் செல்ல வேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கும் தியானம் என்ற இயக்கத்தை கடந்த 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் 26ஆம் திகதி இந்திய அரசு அறிவித்தது. ஒரு சதவீத மக்கள் அமைதியற்ற நிலையில் இருந்தால் அவர்கள் மற்ற அனைவரையும் அமைதியற்றவர்களாக மாற்றுவார்கள். அதேபோல், ஒரு சதவீத மக்கள் தியானத்தில் ஈடுபட்டு உணர்திறனுடனும் உணர்வுபூர்வமாகவும் இயங்கினால் அதன் பலன்களை நம்மால் கணக்கிடவே முடியாது"- என்றார். (எ)

## ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்து 38 பேர் மரணம், 100 பேர் மாயம்

கின்ஷாசா, டிசெ.23

**ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 38 பேர் உயிரிழந்தனர். 100 பேர் காணாமல் போயுள்ளனர்.**



மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு கொங்கோ. இந்த நாட்டின் இகியுடர் மாகாணத்தில் புரிசா என்ற ஆறு பாய்கிறது.

இந்த நிலையில், இகியுடர் மாகாணத்தில் இருந்து அண்டை நகருக்கு புரிசா ஆற்றில் படகு ஒன்று புறப்பட்டது. அந்த படகில் 150இற்கும் மேற்பட்டோர் பயணித்தனர். கிறிஸ்மஸ் பண்டிகையை கொண்டாட பலர் தங்கள் சொந்த ஊருக்கு அந்த படகில் புறப்பட்டு சென்றனர்.

ஆற்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் படகில் பயணித்த அனைவரும் ஆற்றில் வீழ்ந்து தத்தளித்தனர். இந்தக் கோர விபத்தில் ஆற்றில் மூழ்கி 38 பேர் உயிரிழந்தனர். மேலும், 100 பேர் ஆற்றில் அடித்து செல்லப்பட்டனர். ஆற்றில் அடித்து செல்லப்பட்டவர்களை மீட்புக்குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர். (எ)

## லொறி மீது பஸ் மோதி கோர விபத்து, 37 பேர் பலி

பிரேசிலா, டிசெ.23

லொறி மீது பஸ் மோதிய கோர விபத்தில் 37 பேர் பலியாகினர்.

பிரேசில் நாட்டின் மினஸ் கரேஸ் மாகாணத்தில் இருந்து சால் பாலோ நகர் நோக்கி பஸ் ஒன்று புறப்பட்டது. அந்த பஸ்சில் 37 பேர் பயணித்தனர்.

தியொபிலோ ஒடானி பகுதியில் உள்ள நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக பஸ் ரயர் வெடித்தது.

இதனால், சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் எதிரே வந்த லொறி மீது மோதியது. இந்த கோர விபத் தில் 37 பேர் உயிரிழந்த னர். மேலும், சிலர் படுகாயமடைந்தனர். (எ)

## 4000 தொன் கச்சா எண்ணெய் ரஷ்யாவில் கடலில் கலந்தது

மொஸ்கோ, டிசெ.23

ரஷ்யாவில் 4 ஆயிரம் தொன் கச்சா எண்ணெய் கடலில் கலந்தது.

ரஷ்யாவின் கெர்ச் நீரிணை பகுதியில் இரண்டு கச்சா எண்ணெய் கப்பல்கள் சென்று கொண்டிருந்தன. இதில் சுமார் 9 ஆயிரம் தொன் எரிபொருள் கொண்டு செல்லப்பட்டது. அனபா என்ற பகுதியில் சென்றபோது இந்த பகுதியை தாக்கிய புயலால் இரு எண்ணெய் கப்பல்களும் ஒன்றுக்கொன்று மோதின.

இந்த விபத்தில் கப்பல்களில் இருந்த கச்சா எண்ணெய் கடலில் கலக்கத் தொடங்கியது. தற்போதுவரை 4 ஆயிரம் தொன் எண்ணெய் கடலில் கலந்துள்ளது. (எ)

## கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா வான்வழி தாக்குதல்

சனா, டிசெ.23

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களும், லெபனானில்செயல்பட்டு வரும்ஹிஸ்புல்லா போராளிகளும் ஆதரவு அளித்து வருகின்றனர். இந்தக் குழுக்களுக்கு ஈரான் ஆதரவு வழங்கி வருகிறது.

இந்த நிலையில், ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து அமெரிக்க விமானப்படை வான்வழி தாக்குதல் நடத்தியது.



ஏமன் தலைநகர் சனாவில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் நிலைகள், ஆயுத கிடங்குகள், கட்டுப்பாட்டு மையங்களை இலக்கு வைத்து அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

இதேவேளை, கடந்த சில நாட்களாக இஸ்ரேல் மீது ஏமனில் இருந்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர். (எ)

பரிசு பொருட்கள் வாங்க குவிந்தபோது

## கூட்ட நெரிசலில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர்!

அபுஜா, டிசெ.23

நைஜீரியாவில் கிறிஸ்தவ தேவாலயத்தில் பரிசு பொருட்கள் வாங்க குவிந்தபோது கூட்ட நெரிசலில் சிக்கி 4 குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு உணவு மற்றும் உடைகள் உள்ளிட்ட பரிசுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றன. அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில், பொருளாதார நெருக்கடியான நிலையில் மக்கள் அதிகம் வசித்து வரும் சூழலில், இந்த பரிசுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதனால், கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் சிக்கி 4 குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர். (எ)

## உகண்டாவில் வேகமாக பரவும் 'டிங்கா டிங்கா' வைரஸ்

**உடல் நடுக்கத்தால் நடனமாடுவது போன்ற பாதிப்பு**

கம்பாலா,டிசெ.23

உகண்டா நாட்டில் புது விதமான டிங்கா டிங்கா என்ற வைரஸ் வேகமாக பரவி வருகிறது. இது அதிகளவில் பெண்கள், குழந்தைகளை தாக்குவதாகத் தெரியவந்துள்ளது. மேலும், இந்த வைரஸால் பாதிக்கப்படுபவர்கள் தொடர்ந்து நடனமாடிக் கொண்டே இருக்கின்றனராம்.

கொரோனாவை தொடர்ந்து உலகின் பல்வேறு பகுதிகளில் ஏராளமான வைரஸ் தொற்றுகள் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. அந்த வகையில் பெண்கள் மற்றும் சிறுமிகளை தாக்கும் புதிய வைரஸ் நோய் உகண்டாவில் பரவி வருகிறது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*3ஆவது போட்டியில் அசத்தல் ஆட்டம்*

# 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி ரி -20 தொடர் இந்திய அணி வசமானது




மும்பை, டிசெ.23

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான 3ஆவது ரி - 20 போட்டியில் 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி தொடரை கைப்பற்றி அசத்தியது.

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் ரி - 20 போட்டியில் இந்தியாவும், 2ஆவது போட்டியில் மேற்கு இந்திய தீவுகள் அணியும் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி மும்பையில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 217 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து, 218 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்கள் முடிவில் 157 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய மகளிர் அணி வெற்றிபெற்றது. மேலும், 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது. (எ)

# சம்பியனானது இந்தியா




கோலாலம்பூர், டிசெ. 23

ஜூனியர் மகளிர் ஆசிய கிண்ணத் தொடரில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி இந்திய அணி சம்பியனானது.

முதலாவது மகளிர் ஜூனியர் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி (19 வயதுக்குட்பட்டோர்) மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றது. இந்தத் தொடரின் லீக் சுற்று மற்றும் அரையிறுதி ஆட்டங்களின் முடிவில் இந்தியா மற்றும் பங்களாதேஷ் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

இந்த நிலையில், இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 117 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக திரிஷா 52 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் தரப்பில் பர்ஜானா ஈஸ்மின் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 118 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய பங்களாதேஷ், இந்தியாவின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 18. 3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 76 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் இந்திய அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியனானது. (எ)

# 8 விக்கெட் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தான் வெற்றி

## ஒருநாள் தொடரையும் கைப்பற்றியது




புலவாயோ, டிசெ. 23

சிம்பாவேக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2 - 1 என்ற கணக்கில் ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் இரு ஆட்டங்கள் முடிந்த நிலையில், 1 - 0 என ஆப்கானிஸ்தான் தொடரில் முன்னிலையில் இருந்தது. ஓர் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி ஒருநாள் போட்டி நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் களத்தடுப்பை தெரிவு செய்தது. இதன்படி, முதலில் களமிறங்கிய சிம்பாவே அணி தொடக்கம் முதல் ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது. இதனால் 30.1 ஓவர்களில் 127 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சிம்பாவே அணியில் சிறப்பாக விளையாடி சவில்லியம்ஸ் 60 ஓட்டங்கள் எடுத்தார். ஆப்கானிஸ்தான் அணியில் சிறப்பாக பந்துவீசிய கசன்பர் 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து 128 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி தொடக்கம் முதல் அதிரடியாக விளையாடியது. இதனால் 26. 5 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 131 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியால் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 0 என ஆப்கானிஸ்தான் கைப்பற்றியது. (எ)

*21ஆம் நூற்றாண்டின் அரிய சாதனை*

# பாகிஸ்தான் அணி அசத்தல்

கேப்டவுன்,டிசெ.23

தென்னாபிரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு ஒருநாள் தொடரை 2 - 0 என்று கைப்பற்றியுள்ளது. 21ஆம் நூற்றாண்டில் எந்த அணியும் செய்யாத ஒரு சாதனையை பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்க மண்ணில் செய்துள்ளது.

கேப்டவுனில் நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியில் பாபர் அஸாம் (73), ரிஸ்வான் (80), கம்ரன் குலாம் (63) என்று 329 ஓட்டங்களைக் குவிக்க, தென்னாபிரிக்க அணியின் ஹென்ரிச் கிளாசன் 97 ஓட்டங்களை விளாசியும் பயனில்லாமல் 248 ஓட்டங்களுக்குச் சுருண்டு தொடரை இழந்தது.

ஷாஹீன் ஷா அப்ரிடி 47 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும், நசீம் ஷா 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். இந்த ஒரு நாள் தொடர் வெற்றி மூலம் பாகிஸ்தான் செய்த அரிய சாதனை என்னவெனில், 21ஆம் நூற்றாண்டில் தென்னாபிரிக்காவில் மூன்று இருதரப்பு ஒருநாள் தொடர்களை வென்ற ஒரே அணி என்ற பெரிய மைல்கல்லை எட்டியுள்ளது. (எ)

# 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி

வெலிங்டன், டிசெ. 23

முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 291 ஓட்டங்கள் எடுத்தது. அவுஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக அன்னாபெல் சதர்லேண்ட் 105 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் மோலி பென்போல்ட் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 292 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 30. 1 ஓவரில் 5 விக்கெட்களை இழந்து 122 ஓட்டங்கள் எடுத்திர்ந்த போது மழை வந்தது. இதையடுத்து டி. எல். எஸ். முறைப்படி 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. (எ)

# அஸ்வின் ஓய்வு குறித்து மனைவி பிரீத்தி உருக்கம்

சென்னை, டிசெ. 23

கடந்த 14 வருடங்களாக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளராக கோலாச்சி வந்த சென்னையை சேர்ந்த ரவிச்சந்திரன் அஸ்வின், சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு அறிவித்தார். தற்போது நடைபெற்று வரும் பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் இன்னும் 2 போட்டிகள் எஞ்சியுள்ள நிலையில் திடீரென ஓய்வை அறிவித்துள்ளார்.

இது ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், ஐ. பி. எல். தொடரில் சென்னை அணியில் அஸ்வின் விளையாடவுள்ளார். ஓய்வு பெற்ற அவருக்கு பாராட்டுகளும் வாழ்த்துகளும் உலகெங்கிலும் இருந்து குவிந்து வருகின்றன.

இந்த நிலையில், அஸ்வினின் ஓய்வு குறித்து அவரது மனைவி பிரீத்தி உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

இது குறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், “கடந்த இரண்டு நாட்களாக நான் என்ன சொல்லலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தேன். எல்லா நேரத்திலும் பிடித்த கிரிக்கெட் வீரருக்கு மரியாதை செய்யும் விதமாக இந்த பதிவை போடுகிறேனா? ஒருவேளை நான் அஸ்வினின் மனைவி என்ற கோணத்தை மட்டும் எடுத்துக் கொள்வேனா? அல்லது ஒரு கிரிக்கெட் வீரருக்கு ரசிகையின் காதல்




கடிதமா? என்று தெரியவில்லை. ஆனால், இது எல்லாவற்றிலும் கலந்தது என்று நினைக்கிறேன்.

உலகம் முழுவதும் அனைத்து மைதானங்களுக்கும் உங்களுடன் வந்துள்ளேன். உங்களுக்காக எங்கும் நின்றுள்ளேன். நீங்கள் விளையாடுவதை அருகில் இருந்து பார்த்தது பாக்கியம். உங்களிடம் இருந்து நிறைய கற்றுக்கொண்டுள்ளேன். நீங்கள் எனக்கு அறிமுகம் செய்துவைத்த உலகம்தான், நான் சிறுவயதில் இருந்தே விரும்பிய விளையாட்டை என்னை மிக அருகில் இருந்து பார்க்கவைத்தது”- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகைப்படம்...

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அதி வேக ரயிலில் மோதிய நிலையில் குறித்த இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரி ழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் இரத்தினபுரியை சேர்ந்த 37 வயதுடைய தாயும், 18 வயதுடைய மகளுமே உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## முல்லைத்தீவு...

தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலி ஸார் குறித்த மர்மப் பொதியினை எடுத்து சோதனை நடத்தியதில் அதில் 14.7 கிலோகிராம் கோடெக்ஸ் எனும் வெடிபொருள் இருந்துள்ளது.

இதனையடுத்து முல்லைத்தீவு பொலிஸார் குறித்த இடத்தில் இருந்து மீட்டு, வெடிபொருளை கொண்டு சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)

## சட்டத்தின்...

வேண்டிய முக்கியமான மூன்று விடயங்கள் சுட்டிக்காட்டப்பட் டுள்ளன.

உயர் நீதிமன்றங்களில் கடுமையான குற்றவியல் வழக்குகளை தினசரி விசா ரணை செய்தல், இலஞ்சம் மற்றும் ஊழலை கட்டுப்படுத்தும் சட்டங்களை அறிமுகம் செய்தல், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சீர்திருத்தம் ஆகியன இந்த விடயங்களில் உள்ளடங்குவதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## ஜனவரி மாதம்...

எடுக்கப்பட்டிருந்த நிலையில் நிதி மற் றும் இதர காரணிகளால் திட்ட மிட்ட தற்கமைய தேர்தலை நடத்த முடியாமல் போனது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துமாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்து வதற்கு அவதானம் செலுத்தியிருந்த நிலையில் ஜனாதிபதிக்கு வழங்கப் பட்டுள்ள தத்துவங்களுக்கமைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

ஆகவே அரசியலமைப்பின் பிரகாரம் ஒரு மாத காலத்துக்குள் பொதுத்தேர் தலை நடத்தினோம்.

பொதுத்தேர்தலைத் தொடர்ந்து உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்து வதற்கு தீர்மானித்திருந்த நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக் களை இரத்து செய்து, புதிதாக வேட்பு மனுக்களை கோருமாறு பல்வேறு தரப் பினர் வலியுறுத்தினர்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்புமனுக் களின் பிரகாரம் தேர்தலை நடத்துவதில் பல சிக்கல்கள் காணப்படுவது அவதா னிக்க முடிகிறது.

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் நிறைவடைந்தவுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து உறுதியான தீர்மானத்தை அறிவிப்பதாக ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

இதற்கமைய ஜனவரி முதல் வாரத் தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து அறிவிப்போம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு புதிதாக வேட்புமனுக்களை கோரும் வகையில் சட்டமூலத்தை ஜனவரி மாதம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனவரி மாதமளவில் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் பெப்ரவரி மாத மளவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக் கான பணிகளை முன்னெடுக்க முடியும் - என்றார். (அ)

## பிரபாகரனுக்கு...

இளம் குடும்பஸ்தர் ஒருவரிடமே பயங்கரவாத புலனாய்வு பிரிவின் வவு னியா அலுவலகத்தில் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

## நான்கு...

கொண்டு சென்ற வேளை அவர் ஏற்க னவே உயிரிழந்து விட்டதாக வைத்தி யர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசார ணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம் குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோத னைகளின் பின்னர் சடலம் உறவினர்க ளிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-05)

## மணல்...

இந்நிலையில், மண் அகழும் இயந்தி ரத்தின் உதவி கொண்டு 25க்கும் மேற் பட்ட டிப்பர் கனவளவு மண் அகழப் பட்டுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட் டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிற போதிலும் அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ-05)

## அநுரகுமாரவின்...

பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவுக்கும் பிரித்தானிய தூது வருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் தூதுவர், தற்போ தைய பொருளாதார நிலைமை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் ஆழமாக கலந்துரையாடினார்.

அரசாங்கம் ஆட்சியைப் பொறுப் பேற்றதிலிருந்து பொருளாதார ஸ்திரத் தன்மையை அடைவதில் மேற்கொண்ட விரைவான முன்னேற்றத்தைப் பாராட்டி யுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத் திட்டங்கள் குறித்தும், எதிர்கால முன் னெடுப்புக்கள் குறித்தும் பிரதி அமைச் சர் சூரியப்பெரும தெளிவுபடுத்தினார்.

இலங்கைப் பொருட்களின் ஏற்றும தியை, குறிப்பாக சேதன விவசாயப் பொருட்கள், ஆடைகள், இயற்கை அழகுசாதனப் பொருட்களை பிரித்தா னிய சந்தைக்கு ஏற்றுமதி செய்வதை அதிகரிப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்ப டுத்துவதாக தூதுவர் இதன்போது குறிப்பிட்டார்.

அத்துடன், சர்வதேச இறையாண்மை கடன் பத்திரங்களை மறுசீரமைப்பதில் இலங்கையின் முயற்சிகளையும், சர்வ தேச நாணய நிதியத் திட்டத்தை திறம் பட செயற்படுத்துவதையும் தூதுவர் வெகுவாக பாராட்டினார். (அ)

## புதிய...

நாட்டில் தற்போதுள்ள அரசமைப் புக்கு பதிலாக புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு மக்கள் ஆணையும் கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே, அந்த உறுதி மொழி நிச்சயம் நிறைவேற்றப்படும்.

புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களின் கருத்துகள் உள்வாங்கப்படும். நாட்டில் இதுவரை இயற்றப்பட்ட அரசமைப்புகளின்போது மக்களின் கருத்துகள் உள்வாங்கப்படவில்லை. எம்மால் கொண்டுவரப்படும் அரச மைப்பு மக்கள் அனுமதி கிடைத்ததாக இருக்க வேண்டும். அதற்குரிய பணி களுக்காகவே மூன்று வருடங்கள் என கால எல்லை குறிப்பிடப்பட்டிருக்க லாம்.

கடந்த கால யோசனைகளும் உள் வாங்கப்படும் எவ்வளவு சீக்கிரம் முடி யுமோ அவ்வளவு சீக்கிரம் இதனை செய் வதற்கு எதிர்பார்க்கின்றோம். சில வேளை மூன்று வருடங்களுக்கு முன்னர் கூட அது நடக்கலாம் - என்றார். (அ)

# அனைத்து மாணவர்களுக்கும் சலுகைகள் சமமாக வேண்டும்!

## ஆசிரியர் சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 23

பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு வழங்குவது நியாயமற்றது என ஆசிரியர் சங்கங்கள் குற்றஞ்சாட்டு கின்றன.

அஸ்வெசும பயனாளிகளின் பிள்ளை களுக்கும், அஸ்வெசும கொடுப்பனவு தேவையுடையோரின் பிள்ளைகளுக்கும் 6,000 ஆயிரம் ரூபாய் உதவித்தொகை வழங்குவதை விட, அனைத்து பாட சாலை மாணவர்களுக்கும் அரசாங்கம் சலுகைகளை வழங்கவேண்டும் என அந்த சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

அதன்படி, அனைத்து மாணவர் ளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என அகில இலங்கை ஆசிரியர் சங்கத் தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டா லின் தெரிவித்தார்.

மாணவர் தொகைக்கேற்ப வரி குறைக்கப்பட்டு சலுகைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டதொரு குழுவுக்கு மாத்திரம் 6,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படுவது பாரிய பிரச்னையாகும் என்றும் அவர் கூறினார்.

இந்த சலுகைகள் அனைத்து மாணவர்களுக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் என அகில இலங்கை ஆசிரி யர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தின் கொள் கைப் பிரகடன உரையில் அறிவிக்கப்பட் டதற்கு அமைய, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தைக் கல்விக்காக ஒதுக்க வேண்டும் என புரட்சிகர மாண வர் ஒன்றியத்தின் செயற்குழு உறுப்பினர் மங்கள மத்துமகே தெரிவித்தார். (அ)

# அரிசி இறக்குமதி மூலம் ரூ.430 கோடி வருமானம்!

பண்டிகைக் காலம் ஆரம்பித்துள்ள நிலையில், சில பிரதேசங்களில் இன்னும் பல வகையான அரிசிகளுக்குப் பற்றாக் குறை நிலவுவதாக நுகர்வோர் தெரிவிக் கின்றனர்.

இந்த நிலையில், கடந்த சில நாட்க ளுக்கு முன்னர், இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொகை மூலம் இலங்கை சுங்கத்துக்கு இறக்குமதி வரி யாக 430 கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

தனியார் துறையினால் இறக்குமதி செய்யப்பட்ட 67,000 மெற்றிக் தொன் அரிசி மூலம் இந்த வருமானம் கிடைத் துள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித் துள்ளது. (அ)

## ஜனவரி 12 சீனாவுக்கு...

உள்ளிட்டவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

இதேவேளை மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வாவும் பெரும்பாலும் ஜனாதிபதியு டனான சீன விஜயத்தில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், பிரதமர் லி கியாங், வெளிவிவகார அமைச்சர் வோங் யீ மற்றும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் டோங் ஜுன் உட் பட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கி யஸ்தர்கள் பலரையும் பெய்ஜிங்கில் சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்க ளில் ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க தலைமையிலான குழுவினர் பங்கேற்க உள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான குழுவுக்கு பீஜிங்கில் அமோக வரவேற்புக்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், சீனக் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழுவின் சர்வ தேச விவகாரங்களுக்கான துணை அமைச்சர் சன் ஹையன் விஜயத்துக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கப்படுகின் றது.

இலங்கையில் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து நவம்பர் மாதம் 14ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் இடம்பெற்று நிலையானதொரு அரசாங் கம் உருவாக்கப்பட்டதன் பின்னர் தனது முதல் விஜயமாக ஜனாதிபதி அநுர குமார கடந்த வாரத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்திருந்த ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை தொடர்ந்து தற்போது சீன விஜயத்துக்கான ஏற்பாடுகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன.

ஜனவரி 12ஆம் திகதி சீனா செல்லும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான குழு 17ஆம் திகதி வரை பீஜிங்கில் தங்கியிருந்து இரு தரப்பு கலந்துரையாடல்களை முன்னெடுக்கும்.

இந்த விஜயத்தின்போது, சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், துறைமுக நகர் முதலீடுகள், அம்பாந் தோட்டையில் உத்தேசிக்கப்படுகின்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற் றும் சீனக் கப்பல் விஜயங்கள் உட்பட பல்வேறு இரு தரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பரந்தளவில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

குறிப்பாக அம்பாந்தோட்டை துறை முகத்தை அண்மித்த பகுதியில் எண் ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப் பதற்கான இணக்கப்பாட்டை கடந்த அரசாங்கத்துடன் எட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது அம்பாந் தோட்டையில் இந்த எண்ணெய் சுத்தி கரிப்பு நிலையத்தை பாரிய முதலீட்டில் நிர்மாணிக்க சீனா ஆர்வத்துடன் நடவ டிக்கை எடுத்துள்ளது. தெற்காசிய பிராந்தியத்தில் மிகப்பெரிய சுத்திகரிப்பு நிலையத்தை அம்பாந்தோட்டையில் உருவாக்குவதே சீனாவின் திட்டமாக உள்ளது.

இதனை தவிர இலங்கையுடனான கடன் மறுசீரமைப்புகள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான குழு சீனத் தரப்புக ளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெ டுக்க உள்ளது.

மேலும் இரு தரப்பு பொருளாதார ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவதற் கான புதிய முதலீடுகள் குறித்தும் பீஜிங் பேச்சுவார்த்தைகளின்போது அவதானம் செலுத்தப்படும்.

அது மாத்திரமின்றி சீனக் கப்பல்கள் வருகை குறித்து இராஜதந்திர நெருக்கடி களை இலங்கை எதிர்கொள்கிறது.

கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் மூலோபாய ஒத்துழைப்பு களை முன்னிலைப்படுத்தி சீனக் கப்பல் கள் இலங்கைக்கு வருவதற்கான விசேட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதனடிப்படையில் பல சீனக் கப்பல்கள் இலங்கைக்கு வந்தன.

இருப்பினும் ரணில் விக்கிரமசிங்க ஆட்சி காலத்தில் ஏற்பட்ட இராஜதந்திர நெருக்கடியால் சீன ஆய்வுக் கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைவது ஒரு வருட காலத்துக்கு நிறுத்தப் பட்டது.

அந்த கால எல்லை எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதியுடன் முடிவடைகின்ற தருணத்தில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவில் தங்கியிருப்பார்.


எனவே இலங்கைக்கு சீனக் கப்பல் கள் விஜயம் செய்வது தொடர்பிலான இராஜதந்திர அணுகுமுறை முன்னி லைப்படுத்தி இருதரப்பு பேச்சுக்கள் முன்னெடுக்கப்படலாம் என்பது குறிப் பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழரசுக் கட்சியை சீரழிக்கச் சதிவலை

## சந்தேகம் வெளியிடுகிறார் சீ.வீ.கே.



யாழ்ப்பாணம், டிசெ. 23

**இலங்கைத் தமிழரசுக் கட்சியை சீரழிப்பதற்கு சதிவலை பின்னப்பட்டுள்ளதென்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது என்று அக்கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும், வடக்கு மாகாண சபைத் தவிசாளருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

கட்சிக்கு எதிராக தொடர்ச்சியாக வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதானது துரதிஷ்டவசமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு எதிராக நான்கு வழக்குகள் இது வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைத் தமிழரசுக்கட்சி 75ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியாகும். தமிழர்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இக்கட்சியானது தற்போதும் அந்தப் பயணத்தில் தீவிரமாக உள்ளது.

ஆனால் துரதிஷ்டவசமாக கட்சிக்கு எதிராக தொடர்ச்சியாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையான நோக்கமானது, கட்சியை செயல்பாடுகளில் இருந்து ஓரங்கட்டுவதும், கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்துவதுமாகும்.

இதற்கு காரணங்கள் உள்ளன. இலங்கைத் தமிழரசுக் கட்சி தான் தற்போது தமிழ் மக்களின் அதிகளவான பிரதிநிதித்துவங்களை கொண்டுள்ள கட்சியாகும். தமிழ்த் தேசியத்தை பலவீனப்படுத்த வேண்டுமெனக் கருதுகின்ற உள்நாட்டு வெளிநாட்டுச் சக்திகள் தமிழரசுக் கட்சியை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதன் மூலம் தான் தங்களின் இலக்கினை அடைய முடியும்.

ஆகவே, இறுதியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கூட எட்டு ஆசனங்களை வடக்கு - கிழக்கில் வென்றெடுத்து தனது செல்வாக்கை நிரூபித்துள்ள தமிழரசுக் கட்சியை பலவீனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, கட்சிக்குள் இருப்பவர்களையும், வெளியில் இருப்பவர்களையும் பயன்படுத்தி கட்சியை பலவீனப்படுத்துவதற்கு முனையும் தரப்புக்கள் பாரிய சதிவலையொன்றை பின்னியிருக்கின்றார்கள். இந்த விடயத்தை கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும் புரிந்து கொள்தல் அவசியமானது.

திரைமறைவில் மேற்கொள்ளப்படும் தமிழ்த் தேசிய எதிர்ப்புச் சக்திகளின் சதிவலையை முறியடிப்பதற்கும், கட்சியை சிறப்பாக தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் அனைத்து உறுப்பினர்களும் முரண்பாடுகளை களைந்து ஒன்றிணைய வேண்டியது அவசியமாகின்றது - என்றார். (அ)

## வடமராட்சியில் 12 சைக்கிள் திருடிய கள்வன் சிக்கினான்!



யாழ்ப்பாணம், டிசெ. 23

வடமராட்சியின் பல்வேறு பகுதிகளில் சைக்கிள்களை திருடிய நபரொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த 23 வயதானவரே காங்கேசன்துறை மாவட்ட பொலிஸ் குற்றதடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி மு.உதயனந்தன் தலைமையிலான குழுவினரால் கைது செய்யப்பட்டார்.

களவுச் சம்பவமொன்று தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் நடத்தப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது பல்வேறு பகுதிகளிலும் சைக்கிள்களை திருடிய சம்பவங்களுடன் சந்தேக நபர் தொடர்புபட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து சந்தேக நபர் வழங்கிய தகவலுக்கமைய 12 சைக்கிள்கள் மீட்கப்பட்டன.

கைதான சந்தேக நபரையும் கைப்பற்றப்பட்ட சைக்கிள்களையும் நெல்லியடி பொலிஸார் ஊடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை புதிய அரசமைப்பின் ஊடாக நீக்கப்படும்!

## கூறுகிறார் அமைச்சர் விஜித ஹேரத்



கொழும்பு, டிசெ. 23

புதிய அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான செயற்பாடுகளை நாங்கள் முன்னெடுப்போம் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பான யோசனை புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும்.

புதிய அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குகின்ற ஒரு முறைக்கு செல்வதையே நாம் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளோம். எனவே நாம் அதனை செய்வோம்.

இதேவேளை, தற்போது மக்கள் எதனை கோரகின்றனர் என்பது தெளிவானது. பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளியே வர வேண்டும். மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

அரசாங்கமாக நாங்கள் இன மற்றும் மதவாதத்துக்கு எதிராக செயற்படுகின்றோம். அந்த நம்பிக்கை மக்களுக்கு இருக்கின்றது - என்றார். (அ)

## ரோஹிங்கியா அகதிகள் குறித்து முடிவெடுப்பதில் தடுமாறும் அரசு

கொழும்பு, டிசெ. 23

மியன்மாரில் சிறுபான்மையினராக இருக்கும் ரோஹிங்கியா முஸ்லிம்கள், இலங்கை கடலில் தமிழ் கடற்றொழிலாளர்களால் மீட்கப்பட்டு, கடற்படையினரால் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு இரண்டு நாட்கள் ஆகியும், அவர்களின் நிலை தெளிவில்லாமல் உள்ளது.

மீட்கப்பட்ட நூற்றுக்கும் அதிகமான ரோஹிங்கியாக்கள் குறித்து முடிவெடுக்க அவகாசம் தேவை என்று அரசாங்கம் கூறுகிறது.

மிரிஹானைக்கு பஸ்கள் மூலம் அனுப்பப்பட்ட அந்த அகதிகள் இடையில் நிறுத்தப்பட்டு மீண்டும் திருகோணமலைக்கே அழைத்து வரப்பட்டுள்ளனர்.

மிரிஹானை நோக்கிய பயணத்தில் ஹபரணையை அடைந்த போது திருப்பி அனுப்பப்பட்ட அவர்களை குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் சந்தித்த பிறகே அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கூறப்படுகிறது.

இந்நிலையில், அவர்கள் திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். (அ)

## கடல் கொந்தளிக்கும்

கொழும்பு, டிசெ. 23

மேற்கு, மத்திய மற்றும் வங்காள விரிகுடா கடற்பரப்புகளில் காற்றின் வேகம் மணிக்கு 55-60 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால், ஆழ்கடல் பகுதிகளில் பணிபுரியும் பல நாள் மீன்பிடி படகுகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகவும், கடற்பரப்பைச் சுற்றிலும் பலத்த மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும்.

இலங்கையின் தென்கிழக்கு ஆழ்கடல் பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 55-60 கி.மீ (55-60 மைல்) வரை அதிகரிக்கலாம் எனவும், அதனால் கடல் கொந்தளிப்பாகவும் சில சமயங்களில் மிகவும் கொந்தளிப்பாகவும் இருக்கும் எனவும் அந்த அறிவிப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த கடற்பரப்புகளை அண்மித்த பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடல்சார் நடவடிக்கைகளில் ஈடுபடும் சமூகம் இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுள்ளது. (அ)

மின்சாரக் கட்டணத் திருத்தம்

# நாட்டு மக்களின் கருத்துக்களை அடுத்த வாரம் முதல் பெற முடிவு

கொழும்பு, டிசெ. 23

மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் மாகாண மட்டத்தில் பொதுமக்களின் வாய்மொழி மூல கருத்துகளைப் பெறுவதற்கான செயற்பாடுகளை அடுத்த வாரம் ஆரம்பிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

மின் கட்டணத்தைக் குறைக்க முடியாது என மின்சார சபை முன்வைத்த யோசனைக்கு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பதில் அளித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் 10 முதல் 20 சதவீதம் வரை மின் கட்டணத்தைக் குறைக்க வாய்ப்பு உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, கடந்த 17ஆம் திகதி முதல் இது குறித்து எழுத்துமூலமாகக் கருத்துக்களைத் தெரிவிக்கப் பொதுமக்களுக்கு அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், எதிர்வரும் 27ஆம் திகதி முதல் இது தொடர்பில் மாகாண மட்டத்தில் உள்ள மின்சார பாவனையாவர்களிடமிருந்து வாய்மொழிமூல ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 27ஆம் திகதி மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்ட செயலகத்திலும், 31ஆம் திகதி ஊவா மாகாணத்தில் மொனராகலை மாவட்ட செயலகத்திலும் பொதுமக்களின் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

அவ்வாறே சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் ஜனவரி 3ஆம் திகதி இரத்தினபுரி மாவட்டச் செயலகத்திலும், ஜனவரி 4ஆம் திகதி தென் மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் மாத்தறை மாவட்டச் செயலகத்திலும் கருத்துக்களை முன்வைக்க முடியும்.

அத்துடன், எதிர்வரும் ஜனவரி 4 ஆம் திகதி குருநாகலிலுள்ள மாகாண சபை அலுவலகத்தில் வடமேல் மாகாண மக்களுக்கும், ஜனவரி 6 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் வட மாகாண மக்களுக்கும் கருத்துக்களை வழங்குவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், ஜனவரி 8 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அம்பாறை மாவட்ட செயலகத்திலும், ஜனவரி 10 ஆம் திகதி மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்திலும் கருத்துக்கள் பதிவு செய்ய முடியும்.

அதற்கமைய, மின்சாரக் கட்டணம் தொடர்பான தமது இறுதித் தீர்மானத்தை எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதி அறிவிக்க வுள்ளதாகப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org